TAMIL NADU LEGISLATURE
1-OCT 1971
MADRAS

தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1970 மார்ச் 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 429, 430 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

அரியமங்கலத்துக்கு அரசு மருத்துவமனை

* 431 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சிராப்பள்ளி நகருக்கு அருகாமையிலுள்ள அரியமங்கலத்திற்கு ஒரு அரசாங்க கிளை மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் 22-6-66-ம் தேதிக் கூட்டத்தில் இதுமாதிரி ஒரு ஆஸ்பத்திரி அவசியம் என்று வலியுறுத்தி சிபார்சு செய்து அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதா? அதை மீண்டும் புனர்பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மருத்துவ பொதுநலத்துறை இயக்குநர் அவர்கள் அப்படிப்பட்ட வரைவுத்திட்டம் எதுவும் தன்னிடம் வந்து சேரவில்லை என்று குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் வந்ததாகக் குறிப்பு எதுவும் இல்லை.

Government Hospital at Jayankondacholapuram

* 432 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) Whether the Government propose to upgrade the Government dispensary at Jayankondacholapuram into a full fledged taluk headquarters hospital; and

(*b*) if so, the estimated cost of construction of this new hospital?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) அரசு ஆணை எண். 2420, பொதுப்பணித்துறை நாள் 14-11-1968-ல் 40 படுக்கைகள் கொண்ட தாலுக்கா தலைமை மருத்துவமனை ஒன்றை ஜெயங்கொண்ட சோழபுரத்தில் சுமார் ரூ. 3.70 லட்சம் செலவில் கட்ட ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வேலை தற்சமயம் நடந்தேறி வருகிறது.